# வெச்சு செய்வான்!

**"அடிபட்டவன் அழுமட்டும் செய்வான்; அவமானப்பட்டவன் வெச்சு செய்வான்"** என்னும் வாசகத்தை தனது புலனத்தின் முகவரியாக வைத்திருக்கிறார் ஒரு கல்லூரி மாணவர். அதனைப் படித்த போது, சொற்கள் சிந்திக்க வைத்து மனத்தை உறுத்தின. அவ்விளைஞரின் மன வலிதான் அங்ஙனம் பதிய வைத்துள்ளது எனப் புரிந்து கொண்டேன். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, அதனை அவ்வபோது பார்த்து இரசிக்கவும் தொடங்கிவிட்டேன். என் இல்லத்தரசியிடமும், அதனைக் காட்டியுள்ளேன். முதலில் வருத்தமுற்றாலும், அவரும் அதனை இரசிக்கத் தொடங்கிவிட்டார். காரணம், அவ்விளைஞர், அவருடைய தங்கையின் மகன். எனவே, அதனைக் கண்ணுறும் போது, ஒரு வகை, மகிழ்ச்சியோ, நெகிழ்வோ திருப்தியோ ஏற்படுதல் இயல்பு. அவ்விளைஞரைப் பற்றி, ஏதேனும் பேசும்போது, இச்சொற்றொடர் எங்களது மனத்தில் நீந்திப் போதல் இயல்பாகி விட்டது.

இன்று காலை இச்சொற்றொடரை நினைவு கொள்ளும் போது, என் கல்லூரி காலத்தில், தொடர்வண்டியில் பயணித்த போது, செவி மடுத்த ஓர் உரையாடல் நினைவுக்கு வந்தது. கேங்க் மேன் எனப்படும் இருப்புப் பாதை செப்பனிடும், தொழிலாளர்கள் பயணம் செய்யும் போது, நிகழ்த்தியது அது. கார்டு எனப்படும் தொடர்வண்டிக் காவலரான நிர்வாகியைப் பற்றியது அது. ஒருநாள் இதனைக் கூறிய தொழிலாளியின் உறவினரை வழியனுப்பத் தொடர்வண்டி நிலையம் வந்த போது, வண்டி உள் நுழைந்து விட்டது. பயணச்சீட்டு பெறநேரமில்லை. ஆகையால், கார்டுவிடம் சென்று, "ஐயா, இவர்கள் உறவினர்கள் (இருவரோ மூவரோ தெரியவில்லை), அவசரமாகச் செல்ல வேண்டும்" எனவும் அடுத்தோ, அல்லது இரண்டாவது அல்லது மூன்றாவது நிலையத்தில், இறக்கி விட்டு விடுங்கள் எனவும் கேட்டுள்ளார். 'நீ கேங்க் மேன்னா ஓசில அனுப்புவியா? அடுத்த ரெயில்லப் போகச்சொல்லு' எனக் கூறியுள்ளார். அவசரம் என்ற இவரது கோரிக்கையை அவர் ஏற்றுக் கொள்ளவே இல்லை. அவரால் உறவினரை அனுப்ப இயலாது போய்விட்டது. இதேபோல் ஓர் அவசர நிலையில், யாரையேனும் அழைத்துச் செல்லும் உரிமை கார்டுக்கு உண்டு என்பர்.

சில காலம் கடந்து, இந்த தொழிலாளி, இருப்புப்பாதை பணியில் ஈடு பட்டிருந்த போது, அருகிருந்த பாதையில் இன்னொரு வண்டி சென்றுள்ளது. தற்செயலாக அவர் உற்று நோக்கிய போது, அன்று அவரிடம் மறுப்பு சொன்ன கார்டுதான் சென்று கொண்டிருந்துள்ளார். அடுத்து நோக்கியபோது, அதன் கடைசி பெட்டியில், LV என்னும் ஒரு வில்லை சிகப்பு நிறத்துடன் பொருத்தப் பட்டிருக்கும் வில்லை இல்லை. சில சமயம் சிகப்புத் துணி ஒன்றையாவது தொங்க விட்டிருப்பர். அப்படி ஏதேனும் இல்லாத நிலையில், அத்தொடர்வண்டி முழுமையாக இல்லை; இடையில், சில பெட்டிகள் இற்று இருக்கலாம் என்றே கருதவேண்டும் என்பது கருதுகோள். உடனே அத்தொழிலாளிக்கு தோன்றியது யாதெனின், இதனை ஒருப் புகாராக பதிவு செய்வது என்பதே அது. அவரும் தொழிலாளி என்பதால், அவசரச் செய்தி பகிர, மண்டல தலைமை நிருவாக அமைப்பைத் தொடர்பு கொள்ள அவரும் உரிமையுள்ளவராய் இருப்பார். எனவே, மண்டல தலைமை நிலையத்துத்துடன் தொடர்பு கொண்டு, வண்டியின் எண்ணைக் குறிப்பிட்டு, இந்த பாதையில் செல்லும் வண்டியின் அடுத்த நிலையம் எது எனவும் கூறி, அது அறுத்துக்கொண்டு ஓடுகிறது எனக் கூறி புகாரைப் பதிவு செய்து விட்டார். அதன்பின், என்னவாகியிருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை. அந்த கார்டு மீது துறை ரீதியான நடவடிக்கையும், பணியில் கவனமில்லை என்பதாகவும் முடிவு செய்யப் பட்டு அதற்குரிய

தண்டனையும் வழங்கப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனைத்தான் **வெச்சு செய்வது** எனப் புரிந்து கொண்டேன் நான்.

ஈண்டு ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். அதாவது, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் வள்ளுவன் கூற்றை எந்நிலையிலும் மறுத்தல் கூடாது. அடுத்து ஒன்றை மறுத்தல் ஆகாது. அதாவது, அறிவு, ஆற்றல், திறமை என்பது, எல்லோருக்கும் இயற்கையாய் அமைவது, பதவியோ படிப்போ அதன் நிலைக்களன் ஆகாது.

குறிப்பிட்ட நிகழ்வுக்கு முந்தையதாக ஒரு செவிவழி செய்தி உண்டு. அதுவும், தொடர் வண்டித் துறை சார்ந்ததுதான். சுமார், 60 ஆண்டுகளுக்கு முன், ஒரு பயணச்சீட்டு பரிசோதகர் வாழ்வில் நிகழ்ந்தது. அந்நாளில் எல்லாம், இவ்வளவு புகார்கள் பதிவிடப்பட்டு, தண்டம் வசூலிக்க வேண்டும் எனும் ஒரு நிலைப்பாடு இருந்துள்ளது. அந்நிலையில், ஒரு ரெயில்வே காவலர், சொந்த வேலையாக பயணம் செய்தவர், தனது துறை என்பதால், பயணச்சீட்டு இன்றி பயணம் செய்துள்ளார். இதனை அறிந்த பரிசோதகர், தனது மாதாந்திரத் தேவையைப்பூர்த்தி செய்து கொள்ள, அவரைப் பயன்படுத்தியுள்ளார். பணியாளர்களின் பதிவு எண்ணைக் குறிப்பிட்டு புகார் பதிந்தால் போதும், உரியதொகை சம்பளத்தில் பிடித்தம் செய்யப் படும். இந்நிகழ்வுக்குப் பின் காத்திருந்த காவலருக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. பொதுவாக பெரிய இரயில் நிலையங்களில், வண்டியில் தண்ணீர் பிடிக்க குழாய், தண்டவாளங்களுக்கு மத்தியில் (ஒவ்வொரு இருப்புப் பாதை இணைகளுக்கும் நடுவில்) அமைத்து இருப்பார்கள். ஒருநாள் அப்படியான ஓரிடத்தில், இந்த பரிசோதகர் குளித்துக் கொண்டிருந்திருக்கிறார். இப்படியான பழக்கத்தை, சுமார் 40 ஆண்டுகள் முன் வரை நானும் பார்த்திருக்கிறேன். அனுமதியில்லாத இடங்களில், அனுமதி இல்லாத தொழிலாளர்களும் கடத்தல் கூடாது. அதன் அடிப்படையில், அத்துமீரல் என இந்தப் பரிசோதகர் மீதும், பதிலுக்கு புகார் எழுதிவிட்டார் அந்தக் காவலர். இதுவும், **வெச்சு செய்ததுதானோ?**

சில ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் தென்மாவட்டப் பகுதியில், ரெயில்வேயில் நிகழ்ந்த ஒன்றையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நிலைய அதிகாரி அல்லது, நிலைய கண்காணிப்பாளராக, ஒரு நிலையத்தில் ஒரு தமிழரும், அடுத்த நிலையத்தில் ஒரு வட மாநிலத்தவரும் இருந்துள்ளனர். ஒற்றை இருப்புப் பாதை உள்ள பகுதியில், தன் நிலையத்திலிருந்து, வண்டி புறப்பட்ட தகவலை (காலிப் பெட்டிகள் அல்லது சரக்கு வண்டி எதுவாயினும்) அடுத்த நிலையத்துக்கு தொலைபேசியில் அழைத்து, அந்த நிலைய அதிகாரி தெரிவிக்க வேண்டும். அப்போதுதான், அவர் வேறு வண்டியை எதிர் திசையிலிருந்து அனுப்பாமல் இருப்பார். அன்று, அங்கு நிகழ்ந்தது என்னவெனில், தமிழராயிருந்த நிலைய அதிகாரி, வண்டி புறப்பட்டுவிட்டது எனும் செய்தியை, அடுத்த நிலைய அதிகாரிக்கு, அழைத்து தமிழில் தகவல் பகிர்ந்துள்ளார். சில மணித்துளிகளில் தன் தவறை யுணர்ந்து, அடுத்த நிலைய அதிகாரியை அழைத்து, ஆங்கிலத்தில் தகவல் பகிர்ந்துள்ளார். இதற்குள் அங்கிருந்து புறப்படவிருந்த வண்டி நிறுத்தப் பட்டு, விபத்து தடுக்கப் பட்டு விட்டது. இதனைக் கூறிய போது, நான்கூறினேன். விபத்தை தடுத்து நிறுத்தி இருந்தாலும் அந்த தமிழ் அதிகாரி மீது, "அலுவல் மொழியில்" (Official Language) பேசவில்லை என்று நடவடிக்கை எடுப்பார்கள் என்றே கூறினேன். அதே போல், தொடர, அரசியல் தலையீட்டால், அது நிறுத்தப் பட்டது. உள்ளூர் எனும்போது, மக்களுடன் பேச வேண்டிய நிலையில், அது தாய் மொழியாய் இருக்கும் இடத்து, அதுதான் முதலில் வரும். அது இயல்பு. வங்கிகளில், நாம் ஆங்கிலம் பேசினாலும் அவர்கள் இந்தி கலந்துதான் இந்தியைப் பொல் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். இதனை ஒரு தனிக்கட்டுரையாக தனியே பார்ப்போம். –o0o- – **கவிஞர் கவிவளவன்**, 15-11-2024(மதியம் 12.45)